சார்வரி ஹு கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2020

ஸ்ரீ:

மலர்: 3
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்



MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com

பேயாழ்வார் சாற்றுமுறை

சார்வரி ஆடு கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2020

மலர்: 3
இதழ்: 8

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ R. ராகவன் | ஸ்ரீ அழிகூர் R. ராகவன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: M.K.S. Mohan Babu & P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

இம்மாத 'தேசிக ஸந்தேச' மலர் உங்கள் கைகளில் கிடைக்கும் நற்தருணத்-தில், மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்றும் வெளி வருகிறது. ஸந்நிதியில் தினப்படி திருவாராதநங்களோடு விசேஷ உத்ஸவாதிகளும் பழைய நாட்கள் போலவே – ஏன், இன்னும் விசேஷமாக - நடத்திக்கொள்ள எம்பெருமான் திருவுள்ளம் பற்றி உள்ளான்.

ஆம், நவம்பர் 16–ம் தேதி முதல் அமலில் வரும் புதிய 'கட்டுப்பாடு தளர்வு'களைத்தான் குறிப்பிடுகிறோம். தீபாவளி சிறப்பு போனஸ்தான். இது காறும் பட்டினி கிடந்த கண்ணுக்கும் - செவிக்கும் - சிந்தைக்கும், பாரணை படைக்க அலையாய் வரும், ஸர்வேச்வரன் பக்கல் ஸர்வார்த்த-க்ரஹணம் பண்ணிய மானவேல் பரகாலன் கலியனின் வார்ஷிகோத்ஸவம் / ஸ்ரீபாஞ்ச ராத்ர தீபோத்ஸவம் எனத் தொடங்கி, தநுர் மாதத்துக்கு விருதூதும் விழாக்கள் மற்றும் அத்யயன உத்ஸவம்... அநுபவிக்க ஸித்தமாவோம்.

இம்மாத மலரில் இடம் பெறும் சிறப்புக் கட்டுரைகள்:

- ✓ அறிவு தரும் பெரியதிருமொழி
- ✓ ஸ்வாமி தேசிகன் காட்டும் 'வயலும் வாழ்வும்'
- ✓ இடைகழியில் ஏற்றிய விளக்கு

கீழ்க்காணும் உத்ஸவங்களிலிருந்து ஒளிப்படங்கள் இதழுக்கு மேலும் மெருகு சேர்ப்பவையாக அமையும் என நம்புகிறோம்:

- ✓ பேயாழ்வார் உத்ஸவம், சாற்றுமுறை
- ✓ நவராத்ரி உத்ஸவம்
- ✓ பஞ்ச பர்வ உத்ஸவங்கள்
- ✓ வெள்ளிக்கிழமை தாயார் உத்ஸவம்

கண்டு களித்து இன்புறுமின்!

Festivals Galore, And More In Store

FROM THE DESK OF TRUSTEES

With the grace of Lord Srinivasa, Goddess Alarmelmanga and our illustrious Acharya Swami Desika, the State, as well as the nation are on the path to recovery – both from the effects of the Coronavirus pandemic as well as the resultant economic slowdown. We are observing the return of the devotees to the temple in good numbers and we are hopeful that there would be full stream of Sevarthis as the situation further improves.

The 10-day Peyazhwar Utsavam was conducted in a fitting manner, inside the temple. After Mangalasasanam on the concluding day, Special Thirumanjanm was performed to the Divya Dampathis and the Azhwar. In the evening, Pathi Ulathal, Oonjal Seva and Saatrumurai were performed, along with Perumal and Thayar.

As a coincidence, the Navarathri festival and Peyazhwar Utsavam were celebrated during the same period. The Oonjal Seva and the Serthi Asthanam were the highlights of the Utsavam, as usual, and the temple witnessed substantial number of devotees for these. Presently, the Panchami Theertham Utsavam is on, and with Kaliyan Utsavam and Adhyayana Utsavam to follow, devotees are in for a bountiful of grace. We would like to mention here that the norms, as advised by the government, are being diligently adhered to.

His Holiness Sri Tridandi Sriman Narayana Jeeyar acceded to our request and paid a visit to the temple and performed Mangalasasanam in all Sannidhis. Our Devasthanam accorded special honour to the Jeeyar Swami with shawl and Sambavana. HH Swami presented Veshti and Sambavana to all the Kainkaryaparas and Vedaparayana scholars of our temple.

Sri Sridhar Parthasarathy of Mylapore donated an exquisite gold Yajnopaveetam to Swami Desika the Thiru Avatara Utsavam day of the Acharya. Sri N.R. Govindarajan of Mambalam donated a beautiful Pearls Chain with a Golden Pendent. Sri R. Parthasarathy of Nanganallur donated a pair of new Tholukkiniyans to the temple for the exclusive use of Thiruk-Kalyana Utsavam. The Devasthanam honoured them for their gesture and hereby records its sincere thanks. ❇

ஸ்ரீ:

சார்வரி வருட கார்த்திகை மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயதாரர்
நவம்பர் / டிஸம்பர்	கார்த்திகை					
16.11.2020	1	ப்ரதமை / த்விதீயை	திங்கள்	அநுஷம்	மாதப்பிறப்பு தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 6ம் நாள் - காலை - தாயார் திருமஞ்சனம் - மாலை - யானை வாஹனம் உள் புறப்பாடு - இரவு - ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ A.V. ஸ்ரீநிவாஸன்
17.11.2020	2	த்விதீயை / த்ருதீயை	செவ்வாய்	கேட்டை	தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 7ம் நாள் - காலை - தாயார் திருமஞ் சனம் - மாலை - கஜலக்ஷ்மி வாஹனம் உள் புறப்பாடு - இரவு - ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ L.V. நரசிம்மன் குடும்பத்தினர்
18.11.2020	3	சதுர்த்தி	புதன்	மூலம்	தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 8ம் நாள் - காலை - தாயார் திருமஞ்சனம் - மாலை - குதிரை வாஹனம் உள் புறப்பாடு - இரவு - ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீமதி கமலா - சுமைதாங்கி க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பம், ஸ்ரீமதி வஸந்தா வாஸுதேவன் - திருமஞ்சனம் மட்டும்
19.11.2020	4	பஞ்சமி	வியாழன்	பூராடம்	தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 9ம் நாள் - காலை - தாயார் திருமஞ்சனம், தீர்த்தவாரி - மாலை - தங்கக்கேடயம் உள் புறப்பாடு - இரவு - ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ R. ராஜகோபாலன்
20.11.2020	5	ஷஷ்டி	வெள்ளி	உத்தராடம்	கலியன் உத்ஸவம் 1ம் நாள் காலை - பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை - தாயார் கருடவாஹனம் உள் புறப்பாடு - இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ N. வராஹன்
21.11.2020	6	ஸப்தமி	சனி	ச்ரவணம்	கலியன் உத்ஸவம் 2ம் நாள் காலை பெருமாள் தேசிகன் திருமஞ்சனம் மாலை பெருமாள் தேசிகன் உள்புறப்பாடு இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்
22.11.2020	7	அஷ்டமி	ஞாயிறு	அவிட்டம்	கலியன் உத்ஸவம் 3ம் நாள் - இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	

23.11.2020	8	நவமி	திங்கள்	சதயம்	கலியன் உத்ஸவம் 4ம் நாள் - இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	
24.11.2020	9	தசமி	செவ்வாய்	பூரட்டாதி	கலியன் உத்ஸவம் 5ம் நாள் - இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	
25.11.2020	10	ஏகாதசி (60.00)	புதன்	உத்தரட்டாதி	கலியன் உத்ஸவம் 6ம் நாள் - இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	
26.11.2020	11	ஏகாதசி (3.26)	வியாழன்	ரேவதி	கைசிக ஏகாதசி - கலியன் உத்ஸவம் 7ம் நாள் - காலை - பெருமாள் திருமஞ்சனம் - மாலை - பெருமாள் வீதி புறப்பாடு - இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	
27.11.2020	12	த்வாதசி	வெள்ளி	அச்வினி	கைசிக த்வாதசி - புராண படனம் - கலியன் உத்ஸவம் 8ம் நாள் காலை தாயார் உத்ஸவர் திருமஞ் சனம் - மாலை - தாயார் யானை வாகனம் உள்புறப்பாடு இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	கைசிக த்வாதசி - ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் குடும்பத்தினர்; தாயார் உத்ஸவம் - ஸ்ரீ R. ராஜகோபாலன்
28.11.2020	13	த்ரயோதசி	சனி	பரணி	கலியன் உத்ஸவம் 9ம் நாள் - இரவு - கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம்	
29.11.2020	14	சதுர்த்தசி (18.49) / பௌர்ணமி	ஞாயிறு	கார்த்திகை	கலியன் சாற்றுமுறை - காலை - பெருமாள், கலியன், திருமஞ் சனம் - மாலை - பெருமாள், கலியன் உள் புறப்பாடு - இரவு - ஆஸ்தானம் - ஸேவாகாலம், சாற்றுமுறை	கலியன் உத்ஸவம் 10 நாட்களும் - ஸ்ரீ C.S. பார்த்தஸாரதி
30.11.2020	15	பௌர்ணமி	திங்கள்	கார்த்திகை (2.40) / ரோஹிணி	திருக்கார்த்திகை - ஸ்ரீ பாஞ் சராத்ர தீபம் - திருப்பாணாழ்வார் சாற்றுமுறை - காலை - பெருமாள், திருப்பாணாழ்வார், தேசிகன் திருமஞ்சனம் - மாலை - பொழுதுடன் ஆராதனம் - பெருமாள், திருப்பாணாழ்வார், தேசிகன் உள் புறப்பாடு - இரவு - ஆஸ்தானம் - ஸேவாகாலம், சாற்றுமுறை - தைலக்காப்பு	திருப் பாணாழ்வார் சாற்றுமுறை - P.D.R. ட்ரஸ்ட், C/o. ஸ்ரீ ராகவன். திருக்கார்த்திகை திருமஞ் சனம் மட்டும் - ஸ்ரீ K.S. விஜயராகவன்; திருக்கார்த்திகை - ஸ்ரீ N.S. வரதாச்சாரி

ஸ்ரீ:

01.12.2020	16	ப்ரதமை	செவ்வாய்	ரோஹிணி (7.44)	திருமால்வடை	
02.12.2020	17	த்விதீயை	புதன்	ம்ருகசீர்ஷம் (11.46)	திருக்கச்சி நம்பிகள்	
03.12.2020	18	திருதீயை	வியாழன்	திருவாதிரை	ஸ்ரீபாஷ்யகாரர்	
04.12.2020	19	சதுர்த்தி	வெள்ளி	புநர்வஸு	குலசேகராழ்வார்	
05.12.2020	20	பஞ்சமி	சனி	புஷ்யம்	திருமால்வடை	
06.12.2020	21	ஷஷ்டி	ஞாயிறு	ஆயில்யம் (16.10)	திருமால்வடை	
07.12.2020	22	ஸப்தமி	திங்கள்	மகம் (14.15)	திருமழிசையாழ்வார்	
08.12.2020	23	அஷ்டமி	செவ்வாய்	பூரம் (11.38)	ஆண்டாள்	
09.12.2020	24	நவமி	புதன்	உத்தரம் (8.24)	தாயார்	
10.12.2020	25	தசமி (08.08)	வியாழன்	ஹஸ்தம் (0441)	கூரத்தாழ்வான்	
11.12.2020	26	ஏகாதசி (02.20) த்வாதசி	வெள்ளி	சித்திரை (00.32) / ஸ்வாதி	பெருமாள்	
12.12.2020	27	த்ரயோதசி	சனி	விசாகம் (52.28)	நம்மாழ்வார்	
13.12.2020	28	சதுர்த்தசி (45.22)	ஞாயிறு	அநுஷம்	ஸ்ரீமந்நாதமுனிகள்	
14.12.2020	29	அமாவாசை (40.24)	திங்கள்	கேட்டை	பெருமாள்	
15.12.2020	30	ப்ரதமை	செவ்வாய்	மூலம்	அத்யயன உத்ஸவம் - பகல்பத்து 1ம் நாள்	

கார்த்திகையில் முக்கிய உத்ஸவங்கள்

பஞ்சமி தீர்த்த உத்ஸவம்
தீர்த்தவாரி – நவம்பர் 19 (வியாழன்)

கலியன் உத்ஸவம் (10 நாட்கள்)
நவம்பர் 20 (வெள்ளி) முதல் 29 (ஞாயிறு) வரை
சாற்றுமுறை
நவம்பர் 29 (ஞாயிறு)

கைசிக ஏகாதசி
நவம்பர் 26 (வியாழன்)

கைசிக த்வாதசி
நவம்பர் 27 (வெள்ளி)

திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்
நவம்பர் 30 (திங்கள்)

திருக்கார்த்திகை தீப உத்ஸவம்
நவம்பர் 30 (திங்கள்)

அத்யயன உத்ஸவம் – பகல் பத்து
டிஸம்பர் 15 (செவ்வாய்) முதல் 24 (வியாழன்) வரை

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

அறிவுதரும் பெரிய திருமொழி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

பெரிய திருமொழியின் ஏற்றம்

த்ருவனைப் போலவும், நம்மாழ்வரைப் போலவும் எம்பெருமானின் அருளினாலேயே திவ்ய கடாக்ஷம் பெற்று திருமந்திரத்தை உபதேசம் பெற்ற திருமங்கை ஆழ்வார், அதிலுள்ள 'நாராயண' என்னும் பதத்தின் ப்ரபாவத்தை பெரிய திருமொழியின் முதல் பதிகத்தில் அருளிச்செய்கிறார். பின்பு இரண்டாம் திருமொழி முதலாக திருப்பிருதி தொடக்கமாக திருக்கோட்டியூர் ஈறாக 89 திருமொழிகளில் 72 திவ்யதேசத்து எம்பெருமான்களின் மங்களாசாஸன விஷயமாகவும், எம்பெருமானின் ஐந்து நிலைகளையும், அவன் விபாவாவதாரங்களில் செய்த சேஷ்டிதங்களையும் அருளிச்செய்தார்.

- திருமால் ஒருவனே பரதத்வம் என்பதை ''முகிலுரும் எம்மடிகள் உருவம் தானே'' என்றும்
- அவன் திருவடியே தஞ்சம் என்பதை ''அருமா கடலமுதே உனதடியே சரணாமே'' என்றும்
- அந்தத் திருவடியை அடைவதன் பலனாக, ''மற்றுமோர் தெயவமுளதென்று இருப்பாரோடு உற்றிலேன், உற்றதும் உன்னடியார்க்கடிமை'' என்று அவனைத் தவிர்த்து மற்ற தேவதாந்தரங்களில் பக்தி வைப்பது வீணானது என்றும் எம்பெருமானின் திருவடியைப்பற்றி அதன் பயனால் அவனாடியார்களிடம் தொண்டுபூணுவதே பலன், என்றும்

தத்வ - ஹித - புருஷார்த்தங்களையும் வெளியிட்டருளினார்.

மேலும் பத்தாம் பத்தின் தொடக்கத்தில் பல திவ்யதேசங்களையும் ஒருசேர அநுபவித்து, பின்பு இரண்டு பதிகங்களில் இராமபிரானையும், மேல் ஏழு பதிகங்களில் கண்ணனையும் அநுபவித்தும், 11ம் பத்தில் முதல் மூன்று பதிகங்களில் தலைவியின் தன்மை கொண்டும், நான்காவது பதிகத்தில் தசாவதாரங்களின் வைபவத்தையும் அடுத்த பதிகத்தில் எம்பெருமானின் சேஷ்டிதங்களையும், அவனை வணங்குவதே நம்முடைய ஸ்வரூபம் என்று ஆறாம் பதிகத்திலும், பகவத் விஷயத்தில் ஈடுபடாத கண், காது போன்ற நம்முடைய அவயவங்கள் பயனற்றவை என்றும், அவனை ஆச்ரயித்து உய்யும் வகையை திருமொழியின் கடைசி தசகத்திலும் அருளிச்செய்கிறார் திருமங்கை மன்னன்.

ஆடல்மா வலவன் கலியன்

ஆழ்வார் விஷயங்களை நிரூபணம் செய்யும் ஸமயங்களில்,

- ''உற்றதுவும் உன்னடியார்கடிமை'' என்றும்
- ''வாழ்ந்தேபோம் நீரே'' என்றும்,
- ''மெய்ம்மைசொல்லில் வெண்சங்கம் ஒன்றேந்திய கண்ண! நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம்'' என்றும்,
- ''எம்பெருமான் உண்டுமிழ்ந்த எச்சில் தேவர்'' என்றும்

ஒளிவு மறைவின்றியே நேரடியாகவே தெளிவிக்கிறார்.

திருமந்திரத்தில் நடுவிலுள்ள ''நம:'' என்னும் பதம் தானும் தன்னுடைய உடைமைகளும் தனக்கு உரியனவல்ல என்ற பொருளும், தனக்கு ஸ்வாதந்த்ரயம் இல்லை என்ற பொருளும் அந்த திருமந்திரதின் அர்த்தத்தை அநுஷ்டிப்பவருக்கு தேரும்.

எல்லா அர்த்தங்களுக்கும் ஸாரமான திருமந்திரத்தில் ஸாரமான ''நம:'' என்னும் பதத்தின் அர்த்ததை விசேஷித்து இந்த ப்ரபந்தம் கூறுவதால் இதற்கு ''பெரிய திருமொழி'' என்கிற திருநாமம் உண்டாயிற்று என்பர்.

அன்றிக்கே திருமொழிகள் எல்லாவற்றிலும் பாட்டுக்களின் எண்ணிக்கையில் அதிகமாயிருப்பதால் இந்தத் திருநாமம் வழங்கப்படுகிறது என்றும் பெரியோர் கூறுவர்.

இந்த ப்ரபந்தத்தில் இரண்டாம் பத்து ஆறாம் திருமொழியில் ''கடல்மல்லைத் தலசயனத் துறைவாரைக் கொண்டாடும் நெஞ்சுடையார் அவர் எங்கள் குல தெய்வமே'' என்றும், ஏழாம் பத்து நான்காம் திருமொழியில் ''பேராளன் பேரோதும் பெரியாரை ஒருகாலும் பிரியேன்'' என்றும் பாகவத ப்ரபாவத்தைப் பரக்க உபதேசித்தருளினார்.

நாராயண நாமத்தின் பெருமை

ஆழ்வார் பெரிய திருமொழியின் முதல் தசகத்தில் ''வாடினேன் வாடி'' என்னும் பாசுரம் தொடக்கமாக பத்து பாசுரங்களினால் திருமந்திரத்தின் மூன்றாவது பதமான நாராயண சப்தத்தின் அர்த்த விசேஷத்தையும், அந்தத் திருநாமத்தை உச்சரிப்பதனால் ஏற்படும் பயனையும் பரக்க உபதேசிக்கிறார்.

வாடினேன் வாடி எனும் பாசுரத்தினால் மிகுந்ததுன்பங்களுக்கெல்லாம் காரணமான சரீரத்திலே பிறந்து, ''இந்தச் சரீரம் வேறு ஆத்மா வேறு'' என்று பகுத்தறியாமால்

கூடி இந்த சரீரத்தை வைத்துக்கொண்டு இந்த உலக இன்பமே பரம போக்யம் என்று நினைத்து அதனால் வரும் போகமே உயர்ந்தது என்று எண்ணி அந்த போகத்தின் பின்னே தொடர்ந்து ஓடினேன். அந்த ஓட்டத்தினால் இளைத்து பின்பு வருந்தி அதனால் கொம்பில்லாத கொடிபோல் வாடி அந்த வாட்டத்தை மனதினால் வருந்தி வந்தேன். அப்பொழுது ஸர்வேச்வரன் க்ருபையாலே இந்தப் பிணி தீர இந்த ஜீவன் உஜ்ஜீவிப்பதற்கு ஒரு பொருளால் ஞானமாகிற பெரிய ஸ்தானத்தை அடைந்து உள்ளபடியே அறிந்து ''பகவத்விஷயம் நன்று, ஸம்ஸாரம் தீது'' என்று ஆராய்ந்து நான் கண்டுகொண்டேன். அந்த பொருள் ''நாராயணா'' என்னும் நாமம் என்று அநுஸந்திக்கிறார். ஆக நாம் உஜ்ஜீவிப்பதற்கு ஒரே வழி ''நாராயணா'' எனும் நாமம் என்று பரம க்ருபையுடன் நமக்கு அருளுகிறார்.

இதில் ஒன்பதாவது பாசுரத்தில் இந்த 'நாராயண' நாமமானது தன்னை பக்தியுடன் கூறுபவர்களுக்கு உயர்ந்த குலத்தையும் தரும், பகவத் பாகவத விஷயங்களுக்கு உபயோகிக்கத்தக்க செல்வத்தையும் தரும், அந்த பக்தர்களின் துயரங்களை தரைமட்டமாக்கும், பெருவீடான பரமபதத்தையும் தரும், ஞான பக்திகளையும் அதற்கும் மேலான கைங்கர்யமாகிற பெரிய ஸ்தானத்தையும் தரும், அந்த எம்பெருமானை அநுபவிக்கைக்கீடான பலத்தையும் தரும், அந்தத் திருநாமத்தை கூறுபவருக்கு எல்லா ஹிதங்களையும் தரும், பெற்ற தாயைக் காட்டிலும் ஸ்வரூப, ஜ்ஞான விகாஸத்தைப் பிறப்பிக்கும் கைங்கர்யஸ்ரீயை தருவதான திருநாமத்தை இவ்வளவு பலன் கொடுக்கும் என்று அறியாத நான் இப்பொழுது காணப்பெற்றேன் என்று திருநாமத்தின் பலனைச் சொல்லுகிறார்.

மேலும், ஆழ்வார் ஆறாம் பத்து பத்தாம் தசகத்திலும் இந்தத் திருநாமத்தின் பெருமையை மிகவும் ச்லாகித்து அருளிச்செய்கிறார்.

ஆழ்வார் காட்டும் ஆகிஞ்சன்யம்

உலக விஷயங்களிலே நன்றாக ஈடுபட்டிருந்த ஆழ்வாரை எம்பெருமான் தன்னுடைய கருணையினாலே திருமந்திரத்தை உபதேசித்து அதன் பயனாக ஆழ்வார் பல திவ்யதேசங்களையும் மங்களாசாஸனம் செய்தருளி வேதாந்தப் பொருள்களை உலகத்தோருக்கு தெரிவிக்கும் படியாக பெரிய திருமொழியை அருளிச்செய்தார். அவ்வெம்பெருமானை காணாத கண் கண்ணேயல்ல என்றும், அவன் கீர்த்தியை கேட்காத செவி செவியேயல்ல என்றும், அவனைப் பாடாத பாட்டும் அவனைப்பற்றி பேசாத பேச்சும் முறையே பாட்டல்ல, பேச்சல்ல என்றும் கூறி தம்முடிய பாரமைகாந்த்யத்தைப் புலப்படுத்தினார். ஆழ்வார் நிறைவாக மாற்றமுள என்னும் பதிகத்தில் பல உலக உதாரணங்களைக் காண்பித்து, இந்த ஸம்ஸாரக் கடலில் இருந்து மீள்வதற்கு நம்மால் செய்வது ஒன்றுமில்லை என்றும் அந்த எம்பெருமானே நம்மைக் கரைசேர்க்க வேண்டும் என்றும் அவன் கை பார்த்து நிற்பதே நலம் என்றும் தேஹஸம்பந்தத்தை அறுத்தருள வேணுமென்றும் எம்பெருமான் திருவடிகளிலே விழுந்து சரணம் புகுகிறார்.

இதில் ஏழாம் பாசுரத்தில் எம்பெருமான் தம்மை பரீக்ஷை செய்வதற்கு வேண்டி தம்மை (எம்பெருமானை) வேப்ப மரமாகவும் அதில் குடியிருக்கும் புழுவாக தன்னை (ஆழ்வாரை) ஆக்கினாலும் அப்புழுவானது எவ்வாறு கசப்பைத் தவிர வேறொன்றை அறியாதோ, அதேபோன்று தமக்கும் எம்பெருமானைத் தவிற வேறு கதி கிடையாது என்கிறார். எம்பெருமான் கரும்புத் தோட்டமாயிருந்தால், தாமும் கரும்பின் புழுவாகக் கிடவேன் என்றும், இதனால் அவன் அருளால்லாமல் நாம் உய்ய வகையில்லை என்றும் அறுதியிடுகிறார்.

ஒன்பதாம் பாசுரத்தில் ''என்னப்பனே உன் திருவடிகளில் சரணம் புகுந்த எம்போன்ற தொண்டர்களுக்கு, இனிய ஸங்கல்பத்தைச் செய்கின்றவனே, வேதாந்த விழுப்பொருளான தாமரைக்கண்ணனே, ஸர்வேச்வரனே, நான் மிகவும் வருந்துகிறேன். யமனுடைய நரக வேதனை கூட அநுபவித்தால் போய்விடும், ஆனால் இந்தப் பிறவி என்னும் நோய் என்றும் அழியாது. அந்த நரகத்தில் மூழ்காமலிருக்கும்படி, தாஸனான எனக்கும் நீயே அருள் செய்யவேண்டும்'' என்று தம்முடைய கைமுதல் இன்மையை அநுஸந்தித்து, இந்தப் பதிகத்தை ஓதி உணர்ந்தவர்களுக்கு கருமங்கள் எப்பொழுதும் அணுகாது என்றும் பயன்கூறி முடிக்கிறார்.

ஆசார்ய ஸார்பௌமர் கலியனைக் கொண்டாடுவது

நம் ஆசார்ய வள்ளல் தம்முடைய ப்ரபந்த ஸாரத்தில், ஆழ்வாரின் பெரிய திருமொழி எம்பெருமானிடம் பக்தியை வளர்த்து இதர விஷயங்களைத் தவிர்க்க வழி செய்வதால் ''அறிவுதரும் பெரிய திருமொழி'' என்று மிகவும் ச்லாகித்து மங்களாசாஸனம் செய்கிறார். மற்றும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ''திருமந்த்ரத்தை திருமங்கையாழ்வாருக்கு ஸர்வேச்வரன் தானே உபதேசித்தான்'' என்றும், ''ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணின ஆழ்வார் அருளிச்செய்தார்'' என்றும், ''வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன்'' என்றும் பலவாறு போற்றிப் புகழ்கிறார்.

ஆழ்வாரைப் போன்றே ஸ்வாமி தேசிகனும் பெரிய பிராட்டியாரிடம் பக்தியுள்ளவராதலால் பெரியோர்கள் ஸ்வாமியை ''கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே'' என்று போற்றுகிறார்கள்.

இந்தக் கார்த்திகையில் கார்த்திகை நாள் (29.11.2020) ஆழ்வாரின் திருநக்ஷத்ரத்தைக் கொண்டாடி நாமும் நல்வழி உய்வோம்.

கார்த்திகே க்ருத்திகாஜாதம் சதுஷ்கவி சிகாமணிம் |
ஷட்ப்ரபந்தக்ருதம் சார்ங்கமூர்த்திம் கலியமாச்ரயே || ❊

கண்ணுக்கினியன

பேயாழ்வார் உத்ஸவம்



ஸ்ரீ:

பேயாழ்வார் உத்ஸவம்

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

பேயாழ்வார் சாற்றுமுறை

ஸ்ரீ: ஸ்ரீ:

பேயாழ்வார் சாற்றுமுறை



நவராத்ரி உத்ஸவம் - 1 & 2

நவராத்ரி உத்ஸவம் - 3

கண்ணாடி கிரீடம்

நவராத்ரி உத்ஸவம் - 4 & 5

நவராத்ரி உத்ஸவம் - 6 & 7

நவராத்ரி உத்ஸவம் - 8 & 9

பஞ்ச பர்வம், வெள்ளிக்கிழமை உத்ஸவங்கள்



ஸ்ரீ:

பஞ்ச பர்வம், வெள்ளிக்கிழமை உத்ஸவங்கள்



ஸ்ரீ:

ஸ்வாமி தேசிகன் காட்டும்
வயலும் வாழ்வும்

ஸ்ரீ உ.வே. பழவேரி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

பாரதநாடு க்ராமத்தில் வாழ்கின்றது என்பர். இன்றளவும் மக்கள்தொகையில் பெரும்விழுக்காடு க்ராமத்திலேயே வாழ்கின்றனர். க்ராம வாழ்வின் இனிமை நகரத்தில் கிட்டவரிது. க்ராமம் என்றவுடன் வயல், மாடுகள், ஏரி, நீர்ப்பாசனம் போன்றவைவும் உழவர், கணக்குப்பிள்ளை போன்றவர்களும், க்ராம மக்களின் வாழ்க்கை முறையும் நினைவில் வரும். ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகளிலும் இவற்றைக் காணமுடிகின்றது. இக்கட்டுரையில் ஸ்வாமி தேசிகன் மேற்படி விஷயங்களை எடுத்துக்காட்டியுள்ளதைச் சுருக்கமாகக் காண்போம்.

கணக்குப்பிள்ளை

மதுகைடபரிடம் வேதங்களைப் பறிகொடுத்துநின்ற அயனின் நிலையை ஸ்ரீபரமபத ஸோபானம் என்னும் சில்லறை க்ரந்தத்தில் ***சுரணை சோர்ந்த கணக்கனைப்போலே நீர்க்கடை நிலக்கிடை அறியாதே விலாபம் பண்ண*** என்ற எடுத்துக்காட்டால் ஸ்வாமி விளக்குகின்றார். கணக்குப்பிள்ளை க்ராமத்தின் நன்செய், புன்செய், நீர்தங்கும் நிலத்தின் எல்லை ஆகியவற்றின் கணக்கை ஓலைச்சுருளில் எழுதிவைத்திருப்பதைக் கொண்டே வரிவசூல் செய்தல், க்ராமத்தின் நிலத்தைப் பற்றிய வழக்குகளை நிர்வஹித்தல் முதலியவற்றைச் செய்வார். அவ்வோலைச் சுருளை அவர் இழந்தால் தன்பணியை அவரால் தொடர இயலாது. அவ்வாறே வேதத்தை இழந்த அயனும் தவித்தார் என்று அழகிய எடுத்துக்காட்டை ஸ்வாமி தேசிகன் காட்டியுள்ளார்.

உழவன்

திருவேங்கடமுடையானை ஒரு உழவனாக ஸ்ரீதயாஸதகத்தில் ***ஸமயோபநதை: தவ ப்ரவாஹை: அநுகம்பே! க்ருதஸம்ப்லவா தரித்ரீ - ஸரணாகத ஸஸ்ய மாலிநீயம் வ்ருஷசைலேச! க்ருஷீவலம் திநோதி*** என்ற ஸ்ரீலோகத்தில் வர்ணித்துள்ளார். நன்செய் நிலப் பயிர்களாம் ப்ரபந்நர்கள். தயாதேவி தக்க காலத்தில் ப்ரவஹித்து, நிலத்தை நன்கு நனைக்கின்றாள். அதனால் ப்ரபந்நர்கள் என்னும் பயிர் செழிப்புற்று வளர்கின்றது. அப்பயிர்களைக் காக்க உழவன் உயரமான ஒரு பரண் அமைத்து, அதில் தங்குமாப்போலே ஸ்ரீநிவாஸனும் திருமலையில் தங்கிக் காக்கின்றான் என்று தயையை விளித்துப்பேசும் இந்த ச்லோகம் நன்கு சுவைக்கத்தக்கது.

எருது

வகுத்த ஸ்வாமிக்கு கைங்கர்யம் பண்ணுவதே சிறந்ததாகும். அதை விரும்பாமல், அதாவது வீடுபேற்றை விரும்பாமல், ஸ்வர்க்கத்தை விரும்பிச் செல்தல் கேடு விளைப்பதாகும். ஸ்வர்கம் சென்றாலும் அங்கும் உழைக்க வேண்டியதாகும். இதை விளக்க ஸ்வாமி ***எருது பரதேசம் போன கணக்காய்*** என்ற எடுத்துக்காட்டை ஸாதித்துள்ளார். ஒரு உழவன் தனக்கு வயலில் உதவும் எருதுக்கு புல், வைக்கோல் முதலியவற்றைக் காலத்தில் அன்புடன் கொடுத்துக் காத்து வந்தான். ஆயினும் அவனை விட்டு அந்த எருது பக்கத்து க்ராமத்துக்குச் சென்று சுகப்பட எண்ணிற்று. அவ்வுழவனை விட்டுச் சென்றது. பக்கத்து க்ராமத்தில் அது சுற்றி வருவதைக் கண்ட அவ்வூர் உழவன் ஒருவன் இதற்கு சொந்தக்காரன் இல்லை என்பதை அறிந்து தன் வயலில் இராப்பகல் வேலையில் ஈடுபடுத்தினான். அம்மாட்டின் சொந்தக்காரன் வருவதற்குமுன் எவ்வளவு வேலை வாங்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவு வாங்கிகொண்டான். தன் மாடு இல்லை என்பதால் சரிவர புல், வைக்கோல் முதலியவற்றை அளிக்கவும் இல்லை. மாடு இளைத்துப்போனது. தன் தவற்றை உணர்ந்தது. இம்மாட்டின் நிலையே ஸ்வர்க்கம் எய்துபவரின் நிலை என ஸ்வாமி அருளிச்செய்துள்ளது மிகவும் ரஸிக்கத்தக்கது.

களை எடுத்தல்

உழவர் தான் பாய்ச்சும் நீரும் உரமும் பயிருக்குக் கிட்டாமல் தான் உண்டு பயிருக்குக் கேடும் விளைவிக்கும் வேண்டாத புற்களைக் களைந்து பொகட்டுவர். அங்ஙனமே எம்பெருமானான பத்தியுழவனும் ஸாதுசனத்தை நலியும் தீயோரைக் கிள்ளிக் களைபவன் என்பதைப் ***பயிரில் களைபோல் அசுரரைக் காய்ந்தான்*** என்று ஸ்ரீஅம்ருத ரஞ்சனியில் எம்பெருமானைக் குறிப்பிட்டதால் அறியலாம். பயிரிடாத நிலத்திலுள்ள புற்களை எவ்வுழவனும் கிள்ளிக் களைவதில்லை; பயிரைக் கெடுக்கும் புற்களையே கிள்ளிக் களைகின்றான். பகவானும் பாகவத அபசாரப்படாதவரைத் தீயோரைப் பொறுத்திருந்து, அவர்கள் பாகவதர்களை விரோதிக்க ஆரம்பிக்கும் காலத்தில் சீறிக் காய்கின்றான் என்பதற்கு எவ்வளவு பொருத்தமான எடுத்துக்காட்டு ஸ்வாமியால் வழங்கப்பட்டுள்ளது!

நாற்றங்கால்

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இவ்வுலக வாழ்க்கையைப் பெரும்பாலானோர் நரகத்துக்கு

நாற்றங்காலாகவே பயன்படுத்திக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார். உழவன் தான் எவ்வளவு நிலப்பரப்புக்குப் பயிரிட எண்ணுகின்றானோ அதற்குத் தக்கபடி சிறிய நிலப்பரப்பிலே நெல்லை விதைப்பான். அவை முளைத்து 12 அங்குலம் வளரும்வரை நாற்று எனப்படும். பிடுங்கி நடவேண்டிய அவச்யமின்றி முதலிலேயே ஏன் அவர்கள் பரந்த நிலப்பரப்பிலேயே விதைப்பதில்லை! வேலை மிஞ்சுமே! என எண்ணத்தோன்றும். உழவர் மேற்படி நாற்றங்கால் அமைப்பதில் ஆழ்ந்த நோக்கமுண்டு. விதைத்த எல்லா விதைகளும் முளைப்பதில்லை. முளைத்த விதை அனைத்தும் ஊட்டமாய் வளர்வதில்லை. ஆகையால் இவற்றை முதலிலேயே பரந்த நிலப்பரப்பில் விதைத்திருந்தால் ஆங்காங்கே பயிரின்றிப் போகும். அப்பயிரற்ற நிலப்பரப்பைக் கடந்தே நீர் மற்ற பயிர்களுக்குச் செல்ல நேரிடும். இதனால் நீர் மற்றும் உரம் வீணாகும். 12 அங்குளம் வளரும் வரை நீர் அதிகம் தேவையில்லை. இடைவெளியும் அதிகம் தேவையில்லை. ஆகையால் சிறிய நிலப்பரப்பில் நாற்று வளர்வதில் எவ்வித பாதகமும் இல்லை.

இனி ஸ்வாமியால் இவ்வெடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டதற்கான அழகிய காரணத்தை அறிவோம். பயிர் நாற்றங்காலில் சில நாட்களே வாழும். பல மாதங்கள் பரந்த நிலப்பரப்பிலே வாழும். அவ்வாறே மனிதனும் சில நாட்கள் இங்கு வாழ்ந்து அநுதினமும் பாபத்தைச் சேர்த்துக்கொண்டு பல்லாண்டுகள் நரகத்தின் வாழ்க்கைக்குத் தன்னை இலக்காக்கிக் கொள்கின்றான் என்ற ஆழ்பொருள் இவ்வெடுத்துக்காட்டால் கிட்டுகின்றது.

ஒழுகுசங்கிலி

தேவர்களைத் தன்னோடொக்க ஒழுகுசங்கிலியிலே கோப்புண்டு உழலுகிறவர்கள் என ஸ்ரீபரமபத ஸோபானத்தில் குறிப்பிட்டுள்ளார். அதாவது க்ராமங்களில் மாடுகளைத் தொடர்சங்கிலியில் கட்டிவைப்பதுண்டு. அதற்குக் காரணம் தொடர் சங்கிலியில் கட்டுவதால் பல மாடுகளை ஒருங்கே கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள இயலும். இதை புணையடிக்கும் காலத்தில் காணலாம். போரடித்தல் என்றும் இதைக் கூறுவர். ***மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்றெண்ணி ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை*** என்ற வழக்கால் இதை அறியலாம்.

அதாவது நெற்களத்தில் நெற்கதிரைக் கல்லில் அடிப்பர். அப்போது பெரும்பாலான நெற்கள் உதிரும். உதிராத நெற்களை உதிர்க்க நெற்கதிர்களை வட்டமாக அடுக்கி வைத்துப் பல மாடுகளை அதன்மேல் நடக்கச்செய்வர். மாடுகளின் குளம்பின் அழுத்தத்தால் மிஞ்சிய நெற்களும் உதிர்ந்துவிடும். அப்போது அனைத்து மாடுகளையும் ஒரே வேகத்தில் சீராக நடத்த அவற்றின் கழுத்தில் கயிற்றால் ஒழுகுசங்கிலி அமைப்பர். உற்புறம் இருக்கும் மாட்டின் கழுத்தில் இருக்கும் கயிற்றால் அம்மாட்டைத் தன் இஷ்டப்படி நடக்க வைத்தால் தானாகவே அனைத்து மாடுகளும் அவ்வழியே நடக்கும்.

மனிதர்களான நாமும் தேவர்களும் ஜீவர்களே. நாம் அனைவரும் பகவான் என்ற உழவனால் தொடர்சங்கிலியில் ஸம்ஸாரமென்னும் நெற்களத்தில் கோர்க்கப்பட்டே சுற்றி வருகின்றோம். அனைவரும் அவன் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றோம். அச்சங்கிலியிலிருந்து ஒரு மாட்டை விடுவிக்க உழவனாலே தான் இயலும். ஒரு மாடு அச்சங்கிலியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள பக்கத்திலிருக்கும் மாட்டை வேண்டுவதால் யாதொரு பயனுமில்லை. நாமும் ஸம்ஸார பந்தத்திருந்து வெளியேற தேவர்களை அடைவதில் பயனில்லை. பத்தியுழவன் என ஆழ்வாரால் கூறப்பட்ட பகவானையே அடையவேண்டும் என்னும் இவ்வெடுத்துக்காட்டு ஸ்வாமியால் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

ஒற்றைமாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி

ஸ்வாமி பௌத்தர்கள் கருத்துக்கும் அத்வைதிகளின் கருத்துக்கும் அதிக வாசியின்மையால் பௌத்தர்களாம் மாட்டுக்கூட்டத்தில் அத்வைதிகளையும் சேர்த்து எண்ணுவோம் எனக் கூறும் பாசுரத்தை ஸ்ரீபரமதபங்கத்தில் ஸாதித்துள்ளார்.

வேதங்கள் மௌலி விளங்க வியாசன் விரித்த நன்னூல்
பாதங்களான பதினாறில் ஈசன்படி மறைத்து
பேதங்கள் இல்லை என்று ஓர் பிரமப்பிச்சியம்புகின்ற
போதங்கழிந்தவனைப் புத்தர்மாட்டுடன் பூட்டுவமே

இப்பாசுரத்தால் ஒற்றை மாட்டால் இழுக்கப்பட்டு வந்த ஒரு கொள்கை என்னும் வண்டி அத்வைதமதம் பிறந்தபின்பு இரட்டை மாட்டு வண்டியானது என்பதும் தொனிப்பதை அறியலாம்.

வட்டிக்கு வண்டி ஓட்டுதல்

ஸ்ரீமுனிவாஹன போகத்தில் ***பாரமாயபழவினை*** என்ற சொல்லுக்குப் பொருள் கூறுகையில் ***தனிசு தீராதே பொலிசை சுமக்கிற என்னை*** என்று ஸாதித்துள்ளார். இதற்குக் கடன் தீராததால் வண்டி செலுத்துகின்ற என்னை என்று பொருளாகும். க்ராமத்தில் இன்னும் இதைக் காணலாம். கடன் தீர்க்கப் பணம் இல்லாதபோது பாத்திரம், பசு முதலிய பொருட்களால் தீர்ப்பர். அதற்கும் இயலாதபோது கடன்கொடுத்தவன் வயலில் வேலைபார்த்துக் கடன் தீர்ப்பர். இங்கு ஸ்வாமி கடன் தீர்க்க வண்டி ஓட்டுதலை எடுத்துக் காட்டியுள்ளார். ப்ராயச்சித்தம் பண்ணிப் போக்கிக்கொள்ள இயலாத பழவினைகளுக்குத் தீர்க்க முடியாத கடனையும், அதன் பயனாய் இந்த்ராதி தேவதைகளை எடுத்துச் சுமக்கும் நிலை ஒருவனுக்குக் கிட்டுவதையும் இதனிலும் அழகிய எடுத்துக்காட்டால் கூற இயலுமா? ❊

ஸ்ரீ:

இதயத்திருள் கெட

இடைகழியில் ஏற்றிய விளக்கு

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

வேதங்களின் சிரோபாகமான உபநிடதங்களை **(ச்ருதீநாம் உத்தரம் பாகம்)** ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீவ்யாஸபகவான் ப்ரஹ்மஸூத்ரத்தில் பக்தி-ப்ரபத்தி என்ற இரு உபாயங்களால் எம்பெருமானை அடையலாம் என்று காட்டினார். அவர் காட்டிய இவ்வழியே நல்வழி என்று பரமதபங்கத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்.

வையமெலாம் இருள் நீக்கு மணிவிளக்காய்
மன்னிய நான்மறைமௌலி மதியே கொண்டு
மெய்யலது விளம்பாத வியாசன் காட்டும்
விலக்கில்லா நல்வழியே விரைந்து செல்வீர்
[பரமதபங்கம் - 52]

என்றபடி வேதாந்தம் 'ரத்னதீபமாய்' நின்று உலகிலுள்ள அஜ்ஞானமாகிய இருளைப் **(பொய் நின்ற ஞானம்)** போக்குகின்றது என்று ஸ்வாமி தேசிகன் ஸ்தாபிக்கிறார்.

எம்பெருமானுடைய ஸ்வரூப-ரூப-குண விசேஷணங்களை ஸர்வோத்தமமான மூன்று திருவந்தாதிகள் மூலம் மாலைகளாகத் தொடுத்து, அத்தீபத்தை முதன்முதலாக அநாதியான தமிழ் பாஷையில் பாசுரமிட்டுத் தெளியாத மறை நிலங்களைத் தெளியவைக்கும் ஓர் அத்யத்புதமானத் திருவிளக்கை ஏற்றினர் முதல் மூன்று ஆழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வார். அவர்களுக்குப் பின் திருவவதரித்த ஆழ்வார்கள் மற்றும் ஆசார்யர்கள், ஸ்ரீவ்யாஸபகவானும் முதல் ஆழ்வார்களும் காட்டிய வழியில் சென்று, அவ்விளக்கிற்கு மேன்மேலும் எம்பெருமானின் திவ்ய மங்கள அநுபவம் என்னும் நெய்யைச் சேர்த்ததால் இன்றுவரை அவ்விளக்கானது கொழுந்துவிட்டு எரிந்துகொண்டு நம்மிடத்திலுள்ள அஜ்ஞானமென்னும் இருளைப் போக்கிக் கொண்டிருக்கிறது.

ஆங்காங்கே கோயில்களில் அர்ச்சாவதார மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் தர்சனம் செய்துகொண்டு வந்த இம்மூன்று ஆழ்வார்களையும் எம்பெருமான் ஒரே காலத்தில் ஓரிடத்தில் ஒன்று சேர்க்கத் திருவுள்ளம் பற்றி, மூவரையும் திருக்கோவலூரில் வீற்றிருக்கும் திருவிக்ரமப்பெருமானின் திருப்பதியில் ஒன்றுசேர்த்து அவனுடைய அநுபவத்தில் ஆழ்த்தினான். அன்றைய தினம் இரவில் பெருமழை பெய்ததால் பொய்கையாழ்வார் அங்கிருந்த ம்ருகண்டு மஹரிஷியின் ஆச்ரமத்திலே இடைகழியில்

கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்ட 'தமிழ்த் தலைவன்' பேயாழ்வார்.

சயனித்திருந்தார். சற்று நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த பூதத்தாழ்வார் தனக்கும் கொஞ்சம் இடமுண்டோ என்று வினவ அதற்குப் பொய்கையாழ்வார் ''ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்'' என்று கூறி வரவேற்றார். பிறகு அவ்வாறே பேயாழ்வாரும் வினவ, ''இருவர் உட்காருமிடம், மூவர் நிற்கப் பாங்காம்'' என்று பணிந்து வரவேற்றார்கள்.

இதற்காகவே காத்துக்கொண்டிருந்த எம்பெருமான் இவர்களுக்கு இடையில் நான்காவதாக வந்து புகுந்துகொண்டு, பொறுக்கவொண்ணாதபடி ஓர் நெருக்கத்தை ஏற்படுத்தினான். இப்படி நெருக்குவது இவர்களுடைய சேர்த்தியிலே உவந்த நெடுமால் தான் என்று நன்கறிந்த மூவரும், லோகக்ஷேமத்திற்காக ப்ரபந்தங்களை இவர்கள் மூலம் வெளியிட விரைந்த எம்பெருமானின் திருவுள்ளத்தை உணர்ந்தனர்.

ப்ரத்யக்ஷமாய் ஸேவை ஸாதிக்கும் பெருமானைக் கண்ணால் கண்டு ஸேவிக்க அகல் விளக்கே

போதுமானது. ஆனால் **''நடுவில் இவர் ஒருவரும் என்று அறியாவண்ணம்''** ஸ்தூலரூபமாய் எழுந்தருளியிருக்கும் பெருமானை ஸேவிக்க இதுவரை யாரும் ஏற்றாத ஒரு ஆச்சர்யமான விளக்கை அல்லவா ஏற்ற வேண்டும்!

முதலில் பொய்கைப்பிரான் திருக்கோவலூர் எம்பெருமானான நெடுமாலைக் காணச் சாதாரணமான விளக்கு போதாதென்று திருவுள்ளம் கொண்டு, அவனுருவுக்குத் தகுமாறு ஸூர்யனை விளக்காக்கி, அதற்கேற்ப கடலையும் வையத்தையும் நெய்யாகவும் தகளியாகவும் ஆக்கி, எம்பெருமானைத் தவிர்ந்த பொருள்களனைத்தும் அவனுடைமைகள்; அவற்றிற்கெல்லாம் அவன் தலைவன் என்ற பரஜ்ஞானம் கொண்டு

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக -- செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.
[முதல் திருவந்தாதி - 1]

என்றொரு ஆச்சர்யமான விளக்கை ஏற்றி நூறு பாசுரங்களைப் பாடியருளினார்.

ஸூர்யன் எவ்வாறு தன்னையும் காட்டி மற்ற வஸ்துக்களையும் காட்டுகின்றானோ அது போன்றதல்லவோ ஞானம் **(யதா ஸூர்யஸ் ததா ஜ்ஞாநம்)** என்பதனால் ஸூர்யனைக் கொண்டு எம்பெருமானை ஊஹிக்கலானார். ஸூர்யன் விளக்காக வேண்டுமானால் அதற்கு நெய்யும் தகளியும் வேண்டுமே என ஆலோசித்து **''கதிரவன் கனைகடல் முளைத்தனனிவனோ''** என்றபடியால் கடலை நெய்யாகப் பாவித்து, கடல் வையத்தைச் சூழ்ந்திருப்பதாலே இந்த வையத்தையே அகலாகக் கருதினார். ஒப்பற்ற அவ்விளக்கைக் கொண்டு கண்ணாற்கண்டதுபோல் எம்பெருமானை அநுமானத்தால் விசதமாயறிந்தார். ப்ரம்மம் சூன்யமானது என்று கூறும் நாஸ்திக மதங்களை மறுத்து அவன் அசாதாரணமான திருமேனியை உடையவனாயும், திருவாழி முதலிய திவ்ய ஆயுதங்களை ஏந்தினவனாயும் இருக்கின்றான் எனக் கருதினார். ஆழ்வாருக்கு எம்பெருமான் அருளிய மயர்வற மதிநலத்தால், அவனுக்குத் தாம் அடிமைப்பட்டவர் என்பது நன்கு புலப்பட்டு, அதற்க்கேற்ப முதலில் அவன் திருவடிகளைப் பற்றி நின்றார்.

ஸ்வாமி பொய்கையாழ்வார் வையம், வார்கடல், வெய்யகதிரோன் என்ற விஷயங்களைக் காட்டிப் படிப்படியாக எல்லா வஸ்துக்களிலுமுள்ள தோஷங்களைக் காட்டும் நோக்காலே சொல்மாலையைச் சூட்டினார். அருகிலிருந்து கேட்டுகந்த ஸ்வாமி பூதத்தாழ்வார் தோஷங்கள் அறியப் பெற்றதால் விஷயப்ராவண்யம் விலகி, பரமாத்மப்ராவண்யம் நிலைத்து, அவன் வைலக்ஷண்யத்தை உணர்ந்து, அவனிடத்தில் உண்டான அன்பின் வெளிப்பாடாக,

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா -- நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.
[இரண்டாம் திருவந்தாதி - 1]

என்று தொடங்கி நூறு பாசுரங்களைப் பாடியருளினார்.

''நல்லறிவை அளிக்கும் தமிழை விரும்பியுள்ள பூதத்தனாகிய நான் நாராயணனிடத்தில் ஸ்நேஹமே அகலாகவும், அவனை அநுபவிப்பதில் உள்ள ஈடுபாடே நெய்யாகவும், அவ்வநுபவ க்ரமத்தினால் உண்டாகும் களிப்பினால் கரைந்திருக்கும் மனம் திரியாகவும், ஞானஸ்வரூபமான ஆத்மா உருகப்பெற்று எம்பெருமானான நாராயணனுக்கு பரபக்தியான ஒளி நிறைந்த ப்ரதீபத்தை ஏற்றி வைத்தேன்'' என்றருளினார்.

அன்பாவது ஸ்நேஹம். நாராயணனிடத்தில் அந்த ஸ்நேஹம் உண்டாகும்பொழுது அவனை மேலும் அநுபவிக்க வேண்டுமென்கிற ஆர்வம் எழும். அவ்வார்வமிருந்தால் யோகதசையில் மனத்தை அவனிடமே பதியவைப்பதென்ற சிந்தை கூடும். இவ்விரண்டும் திரிகளாகக் கொண்டு ஏற்றப்படும் விளக்கானது இன்பமாக மேன்மேலும் உருகா நிற்கும். இவ்வளவும் ஏற்பட்ட பிறகு பரபக்தி எனப்படும் ஞானம் உதித்து அதுவே நம் அகவிருளனைத்தையும் விலக்கும். இவ்வனைத்தும் நாராயணன் விஷயமானபோது தான். வேறு தேவதையைப் பற்றிய அன்பு முதலியன உள்ளவர்க்கு உள்ளத்தில் அஜ்ஞானமே பரவா நிற்கும் என்று தலைக்கட்டினார்.

மநந பர்யந்தமான ஞானத்தை வையந்தகளியில் பொய்கையாரும், த்யானமென்னும் பக்தியை அன்பேதகளியில் பூதத்தாரும் அருளிச்செய்ய, அதன்மேல் பிறக்கும் பரஜ்ஞானமென்றப் பரிபூர்ண ஸாக்ஷத்காரத்தைத் தொடங்கிப் பேயாழ்வார் திருக்கண்டேன் நூற்றந்தாதி அருளிச்செய்கிறார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் -- செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.
[மூன்றாம் திருவந்தாதி - 1]

''அதுவரை ஸ்தூலகாரமாய் ஸேவையளித்திருந்த என்னப்பனை செவ்வனே கண்டு களிக்கப்பெற்றேன். புருஷகாரமாயுள்ள பெரிய பிராட்டியாரை அவனது திருமார்பில் ஸேவிக்கப் பெற்றேன். அவளது சேர்த்தியால் கடல்வண்ணனான அவனது திருமேனி பொன்னிறமாயிருப்பதைக் கண்டேன். ப்ரகாசிக்கின்ற ஸூர்யனுடையது போன்ற அழகிய நிறத்தையும்

கண்டேன். போரில் எழா நின்ற அழகிய திருவாழியைக் கண்டேன், திருக்கையிலே வலம்புரி சங்கத்தைக் கண்டேன்'' என்று எம்பெருமானின் திவ்யமங்கள ஸ்வரூபத்தின் மேன்மையை நேரில்கண்டு வியந்தருளுகிறார்.

இவ்வைபவத்தை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீதேஹளீச ஸ்துதியில் மங்களாசாஸனம் செய்து அநுபவிக்கிறார்.

தீபேந கேநசிதசீதருசா நிசீதே
ஸ்நேஹோபபந்ந பரிசுத்த குணார்பிதேந
தஹ்ராவகாச நிபிடம் தத்ருசுர் பவந்தம்
ஸ்வாத்யாய யோக நயநா: சுசய: கவீந்திரா:
[தேஹளீச ஸ்துதி - 6]

''வேதத்தையும் த்யானத்தையும் கண்களாகக் கொண்டவர்களாய், மனத்தூய்மையுடையராய், சிறந்த கவிகளான முதலாழ்வார்கள் நள்ளிரவில் குளிர்ந்த ஒளியையுடைய சந்திரனல்லாததாய், விலக்ஷணமானதாய், பக்தியென்னும் நெய்யுடன் கூடியதாய், தூய்மையான ஸத்வகுணத் திரியால் ஏற்றப்பட்ட தீபத்தால் அதியற்பமான இடத்தில் நெருக்கிக் கொண்டிருக்கிற உன்னைக் கண்டார்கள்'' என்று திருக்கோவலூர் தேஹளீசப் பெருமாளை ஸேவித்தருளுகிறார்.

மேலும் முதலாழ்வார்களாலேயே திருக்கோவலூர் எம்பெருமானான த்ரிவிக்ரமனின் ஸௌசீல்யம் வெளிப்பட்டது என்பதனை

காஸாரபூர்வ கவிமுக்ய விமர்த்த ஜந்மா
பண்ணாதடேக்ஷு ஸுபகஸ்ய ரஸோ பஹுஸ்தே
த்வத்பாத பத்மமதுநி த்வதநந்ய போக்யே
நூநம் ஸமாச்ரயதி நூதந சர்க்கராத்வம்
[தேஹளீசஸ்துதி-7]

என்கிற ஸ்லோகம் மூலமாக அழகிய கவிநயத்துடன் ஸாதிக்கிறார்.

''ஆற்றங்கரையில் பயிராகிச் செழித்த கரும்பை ஆலையில் இட்டுப் பிழிந்து எடுக்கும் சாறானது மிக இனியதாயிருக்கும். அது தாமரையினின்று பெரும் உயர்ந்த தேனுடன் கலந்துவிட்டால் அதன் இனிமைக்கு எல்லையில்லை. பெண்ணையாற்றின் கரையில் செழிப்பாய் வளர்ந்த கரும்பு போலுள்ள திருக்கோவலூர் எம்பெருமானை முதலாழ்வார்கள் நெருக்கியபடியால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற இடையீடின்றிக் கலத்தலாகிய ஸௌசீல்யம் கருப்பஞ்சாறாக வெளியாயிற்று. வேறு தெய்வத்தையும் உபாயத்தையும் நாடாத பாகவதர்கள் அவன் திருவடித்தாமரையின் தேனைப் பருகி அநுபவிக்கும்போது அந்த ஸௌசீல்யமென்னும் கருப்பஞ்சாறு புதிய சர்க்கரையாகின்றது. தேனில் சர்க்கரையைக் கலந்தது போல் உன் திருவடிகளை அநுபவிக்கும்போது ஸௌசீல்ய குணம் தோன்றிக் கலந்து அவ்வநுபவத்தை பரமபோக்யமாக்குகின்றது'' என்கிறார்.

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் இராமானுச நூற்றந்தாதியில்,

முதல்மூன்று ஆழ்வார்களிடத்தில் எம்பெருமானாருக்கு இருந்த ஈடுபாட்டை நிர்த்தாரணம் பண்ணுகையில் **''வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்திரித்து அன்றெரித்த திருவிளக்கு''** என்றும் ''இறைவனைக்காணும் இதயத்திருள்கெட ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள்'''' என்றும் முதல் இரு ஆழ்வார்கள் ஏற்றிய விளக்கின் வைபவத்தையும் சேர்த்து மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

மேலும் புறவிருள் மற்றும் அகவிருள் நீங்கி எம்பெருமானை ப்ரத்யக்ஷமாய் நேரில் கண்டு அநுபவித்த பேயாழ்வாரை **''மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த்தலைவன்''** என்று மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக்கருள் தருமாயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக்கிருள் செக நான்மறை அந்தி நடைவிளங்க
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டும்
அம்மெய்விளக்கே.
[அதிகாரஸங்க்ரகம் - 50]

இடைகழியில்ஏற்றியவிளக்கின்வெளிச்சமானதுஎப்படி வீட்டின் உள்ளும் புறமும் படர்ந்து வீட்டின் இருளைப் போக்குமோ அதுபோன்று திருக்கோவலூரின் ஓர் இடைகழியில் கண்ணனாகிய நெடுமால் இம்மூன்று ஆழ்வார்களை நெருக்க அம்மூவரிடமிருந்தும் திருவவதரித்த மூன்று திருவந்தாதிகளென்னும் தீபமானது உலகத்திலுள்ளவர்களின் அஜ்ஞானம் நீங்கவும், நான்கு வேதங்களின் அந்தத்தில் கூறிய மார்க்கம் ப்ரகாசிக்கவும் செய்து இவ்வுலகை உஜ்ஜீவிக்கும் என்றருளி ஆதிபக்தர்களான முதலாழ்வார்களின் வைபவத்தைத் தலைக்கட்டுகிறார் ஸ்வாமி தேசிகன்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 4. ☎ 24953799

தர்சன நேரம்:
காலை 8.30 முதல் 10.30 வரை
மாலை 4.30 முதல் 6.30 வரை
இரவு 7.45 மணிக்கு சயனம்

15. Sri Mahaveera Vaibhavam

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Sri Mahaveera Vaibhavam is another unique hymn composed by Swami Desika. Singing the greatness of Sri Rama – the hero warrior – the Lord enshrined in Thiruvaheendrapuram, along with Sita Piraatti, Ilaiya Perumal (Lakshmana) and Siriya Thiruvadi (Anjaneya), this Sthothra is in prose form.

Characterised by sentences/phrases (ending) with epithets in admiration used as Vocatives, the hymn is full of tongue-twisters and jaw-breakers which match the majesty of the subject matter (Valour of Rama).

The hymn begins with a customary invocation, in which Sri Desika hails Rama as the Sun of Sri Vaikunta, whose lustre is enriched by a halo in the form of His Consort Sita, one that descended on the earth to dispel the inner darkness and fear of all devotees.

It is followed by 94 sentences/phrases that range from the simple and crisp to an astounding array of long-winding compounds and alliterations which make for breathtaking rhythm.

The author himself, in conclusion, states that the hymn is a tough-soft mixed style majesty. "Katora Sukumara Gumba Gambheeram" (கடோர ஸுகுமார கும்ப கம்பீரம்) - 97. This results in an exhilarating experience to the ones who recite and those who listen to it alike. For illustration, we have the two extremes: single-word vocative 'Veera!' (வீர!) – (50), the shortest and 'Krathuhara Sikhari ...' (க்ரதுரஹர சிகரி...) – (20), the longest, with about 30 words.

The latter of the above examples is an embodiment of compelling complexity in terms of phraseology and studded with cryptic references to several anecdotes.

The synopsis goes like this:

Dhaksha's daughter Sathi was wife of Siva. Once there was a feud between Dhaksha and Siva. So, Dhaksha

chose not to give the due offering to Siva during a Yaga performed by him. Unable to bear the disgrace to her husband, Sathi sacrificed her life. An infuriated Siva spoiled the Yaga.

Once when Ravana was returning on board the Pushpaka Vimana of Kubera after conquering him, it stopped near Kailas, the abode of Siva. Nandhi, servant of Siva, who saw this, mocked at it. A livid Ravana uprooted Kailas effortlessly and played with it as if it were a ball. In another instance, Ravana defeated Indra in a battle, with the latter's 'Iravadh', the royal, rampant elephant rendering Ravana's body uneven and rough with scars – marks of bravery.

Ravana himself was defeated by a thousand-armed Kartha Veeryaarjuna, who killed Sage Jamadhagni, father of Parasurama. The enraged son

vowed to destroy the Kshathriya clan without a trace and fulfilled it by slaying kings of 21 generations, including Kartha Veeryaarjuna and did his own filial rites from the pool of their blood.

Recalling these incidents, Swami Desika says, "Rama, You were returning to Ayodhya after Your marriage with Sita. It was then that Parasurama challenged You to tie the string to the Bow of Vishnu, which of course, You did with elan and deprived him of the fruits of his long and sustained penance."

From the above sequence – amazingly, all this in 30 words – it can be seen that the superiority of valour in the ascending order would read as follows: Dhaksha – Siva – Ravana – Kartha Veeryaarjuna – Parasurama – Rama.

This, of course, is one of many such references from Srimath Ramayana as the author encompasses in this Sthothra all the significant events from the seven chapters of the epic.

The chronological break-up of these in terms of phrases is as follows: 1. Bala Kanda (1 to 20); 2. Ayodhya Kanda (21 to 27); 3. Aranya Kanda (28 to 41); 4. Kishkindha Kanda (42 to 46); 5. Sundara Kanda (47); 6. Yudhdha Kanda (48 to 76); 7. Uththara Kanda (77 to 94).

There is scope for inference that Swami Desika chose the prose mode for this Sthothra not just because of absence of constraints on length and the resultant flexibility (no metrical adherence required). But, more precisely, it is because of the

Lord Sri Rama at Thiruvaheendrapuram.

story-telling nature of the hymn, though presented in the second person (addressing Rama Himself). This, in itself, is a novelty and an index of the master composer's resourcefulness as a creator.

As parting salutation, Swami Desika says, “My adoration to Rama, the head (father) of one household – the entire universe – that has Sita as mother, Brahma as son, Siva as grandson, so on and so forth”.

In the final verse, the Phala Sruti, he makes a fervent call to wise men to “read this Mahaveera Vaibhavam composed by the lion among poets and logicians, which is like a medicine to the disease of the worldly existence and fear”. From this it is evident that this is another Sthothra that has been named by Swami Desika himself. However, it is also known as Raghuveera Gadhyam as it emphasises its special nature (Gadhyam means composition in prose order).

To be continued…



With Best Compliments from:

V.A. Raghu & Family

225/28, Prithvi Avenue 2nd Street, Prakrithi Apartments,
Abhiramapuram, Chennai 600018.

SVDD thanks Sri V.A. Raghu & Family
for sponsoring this month's issue of Desika Sandesam

பேயாழ்வார் உத்ஸவம்

நவராத்ரி உத்ஸவம்